விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 243 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 03 வெள்ளிக்கிழமை (19.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்

### பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் ▷11



## கொரோனா +5 மரணம் +166 தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 166 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா ▷11

## ஸ்ரீகுமாரகோபுர கலசாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தசுவாமி கோவிலின் வட திசையில் குபேரவாயில் கோபுரத்துக்கு உட்புறமாக, உள் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள "குபேர திக்கு - குமார வாசல் ஸ்ரீ குமார கோபுர ▷11



## யாழில் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை

### யாழில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த




*(யாழ்ப்பாணம்)* யாழில் கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையின் பணவீக்கம் செப்ரெம்பர் மாதம் உச்சத்தை எட்டும்

(கொழும்பு)

இவ்வாண்டு செப்ரெம்பர் மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் உச்சத்தை எட்டக்கூடும் என்பதோடு அதன் பின்னர் அது குறையும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று தெரிவித்துள்ளார்.

மின்கட்டண மாற்றங்களால் படிப் ▷11

## திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம் நூல் வெளியீட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களால் தொகுக்கப்பட்டு இலங்கை தமிழியற் கழகத்தால் வெளியிடப்படும் திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள இந்துமாமன்ற பிராந்திய அலுவலகத்தில் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் தலைமையில் ▷11

## அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கலாம்

### நுகர்வோர் விவகார அதிகார சபை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படாவிட்டால் சில பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.

தற்போது அரிசிக்கான கட்டுப்பாட்டு ▷11

## பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி

### கண்ணீர்ப்புகை - நீர்த்தாரை பிரயோகம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்ட பேரணிக்கு பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

போராட்டக்காரர்களின் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ▷11



## இராஜதந்திர மார்க்கமாக கோட்டா நாடு திரும்புவார்

### அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நாட்டிலிருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப் ▷11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நீதிமன்றில் கஞ்சா திருடிய பொலிஸ் உட்பட இருவர் கைது

## மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சான்றுப் பொருட்கள் சிலவற்றை திருடிய பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரையும் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் நீதவான் நீதிமன்றில் சான்றுப் பொருட்களாக காணப்பட்ட ஒரு தொகுதி பொருட்களை கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் காவலாளி ஆகிய இருவரும் திருடி உள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை விரைந்து செயற்பட்ட மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் காவலாளி தங்குமிட பகுதியை சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது திருடப்பட்ட சான்றுப் பொருட்களான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதி, முந்திரிகை விதைகள், மீன்பிடி வலைகள் மற்றும் சட்டவிரோத மதுபானம் (கசிப்பு) ஆகியவற்றை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன் போது குறித்த சம்பவத்துடன் தொடர்பு பட்ட மன்னார் நீதிமன்றத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரையும் மன்னார் பொலிஸார் கைது செய்தனர். (ம-7,285)

### கடன் சீரமைப்பு தொடர்பில் ஆராய

# ஜனாதிபதி ரணில் ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மாதம் ஜப்பானுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விஜயத்தின் போது ஜனாதிபதி ஜப்பான் பிரதமருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சீனா, இந்தியா உள்ளிட்ட கடன் வழங்குனர்களுடன் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிக்குமாறு ஜப்பானிடம் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி பங்கஜபாதன் இராசம்மா



கோண்டாவில் வடக்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பங்கஜபாதன் இராசம்மா அவர்கள் நேற்று (18.08.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மதியம் 1.00 மணியளவில் கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(12484)

தகவல் :- குடும்பத்தினர்


# இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும்

## பாகிஸ்தான் உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என பாகிஸ்தான் உறுதியளித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

நீண்ட மற்றும் வலுவான நட்புறவைக்கொண்டதனது நாட்டின் ஒத்துழைப்பை இலங்கை தொடர்ந்தும் பெறும் என உயர்ஸ்தானிகர் உறுதிப்படுத்தினார்.

இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக சர்வதேச மேடைகளில் பாகிஸ்தான் தொடர்ந்து பிரசன்னமாகியமைக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு, கல்வி, தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் கால்நடை பண்ணைகள் மற்றும் பால் பண்ணைகள் ஆகிய துறைகளில் உறவுகளை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நீண்ட கருத்து பரிமாற்றம் நடைபெற்றது.

இலங்கை பௌத்தர்கள் தக்ஷிலா உள்ளிட்ட புராதன பௌத்த யாத்திரை மையங்களை பார்வையிடுவதற்கு தேவையான வசதிகளை செய்து தருமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)


# ஓராண்டு நினைவில்




## அமரர் சேனாதிராசா சௌந்தரராசா

(ஓய்வுநிலை தபாலதிபர்)

கோயிற் புதுக்குளம், வவுனியா

அன்பாய்ப் பழகும் குணம்,
ஆதரிக்கும் நல்ல மனம்,
இல்லை என்று சொல்லாத
ஈகைநிறை வாழ்வு.
உறவுநிலை பேணும்
ஊக்கமுள்ள நற்குடும்பம்,
எல்லா வளமும் உள்ள
ஏற்றம் நிறை குழந்தைகள்.
ஐயமிலா நிலை இருந்தும்
ஒய்யாரி திருவடியில்
ஓய்வு பெறச் சென்றாயோ?
ஔடதமாய் இருந்த உன்னை
அனுதினமும் நினைக்கின்றோம்.

(C-4755)

"வன்னிமலர்க்காடு"
இந்துபுரம், கிளிநொச்சி.

குடும்பம்



# மரண அறிவித்தல்



## திருமதி ஜெசிந்தா ஜெயராணி மரியநாயகம்

( ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் )

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை (இல. 147/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெசிந்தா ஜெயராணி மரியநாயகம் அவர்கள் நேற்று (18.08.2022) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் திரு. யோ. மரியநாயகம் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் லோரன்சியா தம்பதியரின் அன்பு மகளும் யோசேப் மேரிகிறேஸ் தம்பதியரின் அன்பு மருமகளும் செல்ரன்றாஜ் (கட்டடங்கள் திணைக்களம்), அனிஸ்ரன்றாஜ் (நீர் வழங்கல் சபை), நிருசன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தீபா, லக்ஷி ஆகியோரின் அன்பு மாமியாரும் கேஷிகா, திவோன், தாரகை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லொய்லா இக்னேசியஸ், ஆம்ஸ்ரோங் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சென். புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் யாழ்ப்பாண சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(10520)

077 920 5428
077 935 5410

தகவல் :- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.எஸ்.பி. பிளஸ்க்கு பதிலாக 2023 இல் புதிய திட்டம்

## பிரித்தானிய உயர்ஸ்தானிகர்

**(கொழும்பு)**

**பிரித்தானியாவினால் செயற்படுத்தப்படவுள்ள "அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம்" இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரி சலுகைக்கு பதிலாக அடுத்த வருடம் முதல் இந்த புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.**



தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்துள்ள பதிவிலேயே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். அவரது டுவிட்டர் பதிவில் இந்த திட்டம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"அபிவிருத் தியடைந் து வரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம்" வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கையின் 80 சதவீதத்திற்கும் அதிகமான ஏற்றுமதிப் பொருட்கள் பிரித்தானிய சந்தையில் வரியின்றி பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. இதற்கு மேலதிகமாக மேலும் 150 இற்கும் அதிக பொருட்களுக்கு சுங்க வரி நீக்கப்படும்.

அபிவிருத் தியடைந் து வரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம் சில பருவகால வரிக் கட்டணங்களை எளிமையாக்கியுள்ளது. இலங்கையின் உற்பத்திகள் பிரித்தானிய சந்தைக்கு விநியோகிக்கப்படுவதை எளிதாக்குவதே இதன் நோக்கமாகக் காணப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரவுள்ள இந்த புதிய திட்டமானது, ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை முறைக்குப் பதிலாக பிரித்தானியாவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையுடன் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளை தொடர்ந்தும் பேணுவதற்கு பிரித்தானியா எதிர்பார்க்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# கைதான மேர்வின் சில்வாவை விடுவித்தது நீதிமன்று

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மேர்வின் சில்வாவை விடுவித்து எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (4)

# அதிபர் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள யா/மிருசுவில் றோ.க. த.க.பாடசாலை (வகை II), யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்(வகை III) ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் பொருத்தமான பாடசாலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும். வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு-IIஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அதிபர் வகுப்பு-II ஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு-III ஐச்சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

வகை -III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு 3ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 30.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (4)

# மு.வண்டி கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

முச்சக்கரவண்டிகளுக்கான பயணக் கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முதலாவது கிலோமீற்றருக்காக 120 ரூபா அறவிடப்படவுள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

இரண்டாவது கிலோமீற்றருக்காக 100 ரூபா அறவிடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# வார இறுதி நாட்களில் சிறப்பு ரயில், பேருந்து சேவைகள்

(கொழும்பு)

முக்கிய வழித்தடங்களில் எதிர்வரும் செப்டெம்பர் முதல், வார இறுதி நாட்களில் சிறப்பு புகையிரதங்கள் மற்றும் பேருந்து சேவைகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பொதுப்போக்குவரத்திற்கான தேவை அதிகரித்து வருவதால் பெரும்பாலான புகையிரதங்கள் முன்பதிவு செய்யப்படு கின்றமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார். (4)

# பல்கலைக்கழக அனுமதிக்கு தேசிய அ.அட்டை அவசியம்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்தில் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

எனினும், குறித்த ஆவணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சையின் முடிவுகள் இம்மா[illegible] வுள்ளது என[illegible] (4)


சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்




திரு. மாணிக்கம் சிவனேசன் (ஆசிரியர்)
(பயிற்றப்பட்ட விஞ்ஞானம்– SLTS -I)
(யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)

சேவை விபரம்

| | |
|---|---|
| 21.10.1988- 19.01.1992 | - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. |
| 20.01.1992-31.12.1993 | -பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை |
| 01.01.1994-04.03.1997 | -யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் |
| 05.03.1997- 08.01.2006 | -யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் |
| 09.01.2006-11.01.2009 | -யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை |
| 12.01.2009-28.12.2021 | -யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் |

அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது சக ஆசிரியரின் ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக இருக்க மனதார வாழ்த்துகின்றோம்.

(12488)

வாழ்த்துவோர்- பாடசாலைச் சமூகம்
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

## சென்றலைட்ஸ் அணி அரையிறுதிக்கு தெரிவு



இலங்கை கிரிக்கெட் பிரிவு III தொடரின் முதலாவது கால் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி ஜொலிஸ்ரார் அணியை 110 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கஜன்-52, கௌதமன்-36, பிரியலக்ஸன்-29, அலன்ராஜ்-28, சாரங்கன்-22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கோபிராம் 10 ஓவர்களில் 23 ஓட்டங்களைக் கொடுத்து 02 விக்கெட்டுகளையும், ஜங்கரன் 8 ஓவர்களில் 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், மிதுலக்ஸன் 8.1 ஓவர்களில் 42 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் பிரசன்னா 10 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 26 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் சந்தோஸ்-60 ஓட்டங்களை பெற்றுள்ளார். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக தசோபன் 5 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், ஜெரிக் 6 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் டார்வின் 6 ஓவர்களில் 23 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்வுக்கு சென்றலைட்ஸ் அணி 12.28 புள்ளிகளையும், ஜொலிஸ்ரார் அணி 2.08 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# உதைபந்தாட்ட போட்டி இறுதிக்குள் நவஜீவனிஸ்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்று போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

இதன் அரையிறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதியது.


ஆட்டம் ஆரம்பம் முதல் தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (4-90)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2691

### அலன்

டாக்டர் இடது கால் ரொம்ப வலிக்குது வயசு ஆயிடுச்சு அது தான்

வலது காலுக்கும் அதே வயசு தானே ஆச்சு



### சாருலதா

நோயாளி: பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய எவ்வளவு செலவாகும் டாக்டர்?

டாக்டர்: 5 இலட்சம் ரூபாய் ஆகும்



நோயாளி: ஒரு வேளை நாங்களே பிளாஸ்டிக்கை கொண்டு வந்துட்டால் எவ்வளவு குறைப்பீங்க?

### தசோபன்

விடியும் வரை
தெரிவதில்லை
கண்டது கனவு என்று
வாழ்க்கையும்
அப்படி தான்..
முடியும் வரை
தெரிவதில்லை
வாழ்வது
எப்படி என்று

### ஆதிரா

கணவனின் FACEBOOK STATUS

பறவையைப் போல வானில் பறக்க வேண்டும்

மனைவியின் COMMENT:

பூமிக்கு வரும்போது ஒரு கிலோ வெங்காயமும் நாலு முட்டையும் வாங்கிட்டு வாங்க

### ஜெரிக்

சரித்திரத்தை திரும்பி பார்த்தால் அது எனக்கு கத்து கொடுத்தது ஒன்னே ஒன்னு தான்



நாம வாழனும் என்றால் நேரா நேரத்துக்கு சாப்பிடனும்

### மீனா

கடவுள் ஒரு கதவை மூடினால் இன்னொரு கதவை திறப்பாராம்



எனக்கெல்லாம் கதவையும் மூடிட்டு சாவியையும் தொலைச்சிட்டாரு போல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தலை விரைவில் நடத்த வாய்ப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு

**(கொழும்பு)**

**உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இதற்கமைவாக இந்த மாதம் 20 ஆம் திகதியின் பின் உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த போதிலும் உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சரின் தலையீட்டினால் அதனை ஒரு வருட காலத்திற்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், ஓகஸ்ட் 20 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை மீண்டும் நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

# வெளிநாட்டு நாணயங்களை விற்க-வைப்பிலிட பொது மன்னிப்புக் காலம்

(கொழும்பு)

பொதுமக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வைப்பு அல்லது விற்பனை செய்வதற்கான பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் வசமுள்ள வெளிநாட்டு நாணயத்தை வங்கித்தொழில் முறைமையினுள் கவர்ந்து கொள்ளும் பொருட்டு, வெளிநாட்டு நாணயத்தாள்களை உடைமையில் வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்காக நிதி அமைச்சர் 2022.08.15 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு மாத பொது மன்னிப்புக் காலத்தினை வழங்கும் உத்தரவொன்றை பிறப்பித்துள்ளார்.

குறித்த உத்தரவின்படி வெளிநாட்டு நாணயத்தை வைத்திருப்பவர்கள் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கில் ஏற்புடையவாறு வைப்பிலிட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு (உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி) விற்பனை செய்ய ஒரு மாத பொது மன்னிப்புக் காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4)

# உலக சந்தையில் தங்க விலை சரிவு

(கொழும்பு)

தங்க விலையானது மூன்றாவது நாளாக சர்வதேச சந்தையில் 1800 டொலர்களாக சரிந்து காணப்படுகின்றது.

பணவீக்கத்திற்கு எதிராக தங்கம் இருந்து வரும் நிலையில் தற்போது சர்வதேச சந்தையில் அவுன்ஸ்க்கு பெரியளவில் மாற்றமின்றி, 1790.70 டொலர்களாக வர்த்தகமாகி வருகின்றது.

எதிர்வரும் நாட்களில் தங்க விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் டொலரின் மதிப்பு தற்போது மீண்டும் ஏற்றம் காண ஆரம்பித்துள்ளதன் காரணமாக தங்கம் விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (4).

# உச்சத்தை தொட்ட அன்னாசி விலை

(கொழும்பு)

தட்டுப்பாடு காரணமாக இதுவரை 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு அன்னாசிப்பழத்தை தற்போது 700 ரூபாவுக்கும் மேலான விலையில் விற்பனை செய்ய நேரிட்டுள்ளதாக சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைய நாட்களில் ஒரு கிலோ அன்னாசிப்பழம் 250 ரூபாய் முதல் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. அன்னாசிப்பழங்களை பயிரிடுவதற்காக பயன்படுத்தப்படும் உரம் மற்றும் எண்ணெய் வகை என்பன இல்லாத காரணத்தினால் அறவடை குறைந்துள்ளது. இதுவே விலை அதிகரிப்பிற்கு பிரதான காரணம் என தெரிய வந்துள்ளது. (4)

# கோட்டா நிம்மதியாக வாழ வழிவகை செய்ய வேண்டும்

## என்கிறார் வாசுதேவ

(கொழும்பு)

"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்ப வேண்டும். அவர் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும்." என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.



நாடு திரும்பும் கோட்டா மீண்டும் அரசியலில் ஈடுபட மாட்டார் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு மீண்டும் வருகை தரவுள்ளார் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவரும் அவரது உறவினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்திருந்தார்.

வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று முன்தினம் வந்த உதயங்க வீரதுங்க அங்கிருந்து வெளியேறும்போதே இந்தத் தகவலை வெளியிட்டிருந்தார். (4)

# இராசிபலன்

19.08.2022
ஆவணி 03, வெள்ளிக்கிழமை
அட்டமி பின்னிரவு 2.39 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 6.00 மணிவரை
சுப நேரம் -6.05-7.35 மணிவரை
இராகு காலம் -10.35-12.05 மணிவரை
ஜன்மாஷ்டமி
சந்திராஷ்டமம்-சித்திரை

வளவன்

**மேஷம்** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்** உறவினர், நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர் [illegible]

**துலாம்** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக [illegible] காட்டுவீர்கள்.

**மகரம்** செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுக போட்டிகள் மாறும் பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

எங்கே நம்பிக்கை இருக்கிறதோ அங்கே கீழ்ப்படிதல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## இரு கேள்விகள்

(நேற்றைய தொடர்ச்சி)

என் நண்பரான பண்டிதர் ஞானசேகரரிடமும் இன்னொரு இளைஞன் சோமசேகரனிடமும் கேட்டு அறிந்து வந்தே கூறினேன். நான் படிப்பே அறியாதவன்" என்றான். எனக்குத் தெரியும் என்று கூறி தேவ கன்னிகையும் எல்லாம் அவனது தலையைத் தொட்டாள்.

பிறகு அவள் "ரத்தினம்! நீ இப்போது எல்லா சாஸ்திரங்களையும் கற்ற பண்டிதனாகி விட்டாய். யட்சிணி வித்தைகள் கூட உனக்கு இப்போது தெரியும்" எனக் கூறி அவனை ஆசீர்வதித்து விட்டு மறைந்தாள்.

கனகரத்தினம் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்து ஞானசேகரரையும் சோம சேகரனையும் கண்டு நடந்ததைக் கூறினான். ஞானசேகரரோ நீ என்னைவிடப் பெரிய பண்டிதனாகி விட்டாயோ?" என்று கோபமாகக் கூறிக் கொண்டே போய் விட்டார்.

கனகரத்தினம் அது கண்டு திகைத்து நின்றான். அப்போது சோமசேகரன் "அந்தப் பண்டிதர் சுயநலம் கருதுபவர். கவலைப் படாதே" எனக் கூறி தன் இடுப்பிலிருந்து ஒரு சந்தன மாலையை எடுத்து அவன் கழுத்தில் போட்டான்.

அதுகண்டு கனகரத்தினம் "ஞான சேகரரின் கோபத்திற்குக் காரணம் தெரிகிறது. ஆனால் நீ எனக்கு மாலை ஏன் போட்டாய்?" என்று கேட்டான்.

சோமசேகரனும் "நான் சோமசேகரன் அல்ல. காமினி" என்று வெட்கப்பட்டவாறே



கூறிவிட்டுப் போனான்.

கனகரத்தினம் தலைநகருக்குப் போய் கனகவர்மனைக் கண்டு தான் பிரம்ம ராட்சஸியின் பிரச்சினையைத் தீர்த்ததைக் கூறினான்.

மன்னனும் என் மகள் காமினி எல்லாவற்றையும் விவரமாகக் கூறி விட்டாள். அவள் உன்னைத்தான் மணப்பாளாம். நான் உனக்கு வாக்களித்த நாட்டைக் கொடுப்பதோடு என் மகளையும் மணம் செய்து கொடுக்கிறேன்" என்றான். கனகரத்தினமும் அதற்குச் சம்மதித்தான்.

வேதாளம் இக்கதையைக் கூறி "மன்னா! காமினி எல்லா இளவரசர்களையும் நிராகரித்துவிட்டு தேவ கன்னிகையின் அருளால் அறிவும் சக்தியும் பெற்ற கனகரத்தினத்தை ஏன் மணந்தாள்? ஞானசேகரரை சுயநலக்காரர் என அவள் கூறி கனகரத்தினத்திற்கு அவள் மாலை போட்டது சுயநலம் கருதித்தானே! இச்சந்தேகங்களுக்குச் சரியான விடை தெரிந்திருந்தும் நீ கூறாவிட்டால் உன் தலை வெடித்து சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்கிரமனும் "காமினி விரும்பியது நற்குணங்கள் கொண்ட வீரனையே. கனகரத்தினம் மலைவாசிகளுக்காகத் தன் உயிரையே தியாகம் செய்ய வந்தது கண்டு மனம் மகிழ்ந்தாள்.

அவன் தன் நேர்மையால் தேவகன்னிகையின் அருளுக்குப் பாத்திரமானான். இப்படிப்பட்டவனைத் தானே கணவனாக அடைய காமினி விரும்பினாள். அது நிறை வேறியது. எனவே சுயநலம் கொண்டு காமினி கனகரத்தினத்தை மணக்கவில்லை. தன் கொள்கைப் படி மணந்தாள்" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பி முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## மதுரமான வாழ்வு தேடி...

38



கோவலன் புகாரிலிருந்து புறப்பட்டான். நீண்ட காலம் வாழ்ந்த ஊர் ஆயிற்றே என்கிற வருத்தம் அவனுக்குச் சிறிதும் இல்லை.

பெரிய செல்வந்தரின் மகனாக, மற்றவர்களுக்கு வாரி வழங்கும் குடும்பத்துப் பிள்ளையாக வாழ்ந்த ஊர். அதில் ஓர் ஏழை வியாபாரியாக எப்படி வாழமுடியும்? வேறு ஊருக்குச் செல்வதுதான் ஒரே வழி!

ஊரின் எல்லையில் இருந்த கோயிலில் வழிபட்டு அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள். புகார் நகரம் அவர்களை விட்டு மெல்ல மெல்ல பின்னால் போய்க்கொண்டிருந்தது.

இரண்டொரு மணி நேரம் நடந்திருப்பார்கள். செல்வத்திலேயே வளர்ந்த கண்ணகி மிகச் சீக்கிரம் சோர்ந்து போனாள்.

மதுரை இன்னும் எவ்வளவு தூரம்? என்று கேட்ட அவள் நன்றாக வியர்த்துப் போயிருந்தாள். இன்னும் கொஞ்ச தூரம்தான், ஐந்தாறு காத தூரம் இருக்கும் என்று கோவலன் சிரித்தான்.

ஐந்தாறு காத தூரம் என்று கோவலன் சொன்ன பதிலுக்கு உண்மையான அர்த்தம் வேறு ஐந்து ஆறு அதாவது முப்பது காத தூரம்!

அதை வெளிப்படையாகச் சொன்னால் அவள் சோர்ந்து போகக் கூடும். ஆகவே இப்படி மாற்றிச் சொல்லிச் சமாளித்தான்.

பக்கத்தில் இருக்கிற சோலையில்தான் கவுந்தி அடிகளின் தவப் பள்ளி உள்ளது. அங்கே போய்ச் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு அவரது ஆசியையும் பெற்றுக்கொண்டு புறப்படலாம் வா.

விரைவில் அவர்கள் கவுந்தி அடிகளின் தவப்பள்ளியை அடைந்தார்கள்.

அடிகள் இருவரையும் அன்போடு வரவேற்றார். ஆனால் அடுத்த அவர் கேட்ட கேள்வி கோவலனைத் தாக்கியது.

தவறான செயல்களில் ஈடுபடுகிறவர்கள் ஊரை விட்டு ஒடுவது போன்ற அவசரம் உங்களிடம் தெரிகிறதே? என்ன ஆயிற்று?

இதற்கு பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன் என்று மட்டும் சொன்னான் கோவலன். நாங்கள் மதுரைக்குச் சென்று புது வாழ்வு தொடங்க இருக்கிறோம். இடைவிடாத தவத்தின் பயனாக உன்னதமான ஆன்ம சக்தியைப் பெற்றவர் கவுந்தி அடிகள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 55

ஜனவரி 6 ஆம் திகதி தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்தியதற்கு எதிராக விக்டர் யானுகோவிச் தாக்கல் செய்த மேல் முறையீட்டை உக்ரைன் உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

ஜனவரி 10 அன்று உக்ரைனிய தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக விக்டர் யுஷ்செங்கோவை வெற்றியாளராக அறிவித்தது மற்றும் ஜனவரி 11 அன்று இறுதி தேர்தல் முடிவுகளை வெளியிட்டது. யுஷ்செங்கோ உக்ரைனின் மூன்றாவது ஜனாதிபதியாக பதவியேற்க வழிவகை செய்தது.

குச்மா நிர்வாகம் மற்றும் உக்ரைனின் மத்திய தேர்தல் ஆணையம் ஆகியவை இரண்டாம் சுற்றுத் தேர்தல் முடிவில் உயர்மட்ட ஈடுபாட்டைச் சுட்டிக்காட்டும் உறுதியான ஆதாரங்கள் இருந்தபோதிலும் எந்தவொரு உயர் அதிகாரிகளுக்கும் எதிராக குற்றவியல் தேர்தல் மோசடி குற்றச்சாட்டுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.


2005 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தேர்தல் மோசடி குற்றச்சாட்டின் பேரில் பல பொதுப் பிரமுகர்களை அரசு வழக்கறிஞர் கைது செய்திருந்தபோதும் உயர்தர வழக்கு எதுவும் நீதிமன்றத்தில் கொண்டு வரப்படவில்லை.

**ஜனவரி 23 ஞாயிற்றுக் கிழமை நண்பகல் வேளையில் அதிகாரபூர்வ விழாக்கள் நடந்தன. யுஷ்செங்கோ அரசியலமைப்புப் பிரமாணம் செய்து கொண்ட போது ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.**

செப்டம்பர் 23 2005 அன்று யுஷ்செங்கோ பிராந்தியங்களின் கட்சியுடன் ஒரு ஒப்பந்தத்தை அறிவித்தார். அதில் 2004 உக்ரைனிய ஜனாதிபதித் தேர்தல்களின் போது வாக்கு மோசடியில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக உறுதியளித்தார்.

யுஷ்செங்கோவின் ஜனாதிபதி பதவியின் முதல் சில ஆண்டுகள் அரசியல் கொந்தளிப்பு நிலவியது. ஆரஞ்சு புரட்சியின் சக தலைவரான பிரதம மந்திரி யூலியா திமோஷென்கோ உட்பட அவரது அனைத்து அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்யும் வரை அவரது முதல் அமைச்சரவை செப்டம்பர் 2005 வரை மட்டுமே பணியாற்றியது.

அடுத்த பிரதம மந்திரி யூரி யெகானுரோவ், ஜனவரி 2006 வரை மட்டுமே பதவியில் இருந்தார். அந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் யுஷ்செங்கோவின் நமது உக்ரைன் கட்சி, யானுகோவிச்சின் பிராந்தியங்களின் கூட்டுக் கட்சி மற்றும் யூலியா திமோஷென்கோ பிளாக்கிற்குப் பின்னால் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. பாராளுமன்றத்தில் ஆரஞ்சு கட்சிகள் என்று அழைக்கப்பட்ட ஒரு முன்மொழியப்பட்ட கூட்டணி உடைந்தபோது, யுஷ்செங்கோ தனது போட்டியாளரான யானுகோவிச்சை பிரதம மந்திரியாக ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



உக்ரைன் ஜனாதிபதி
விக்டர் யுஷ்செங்கோ
2005-2010

2006 இல் நடைமுறைக்கு வந்த அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் அவரது அரசியல் பாத்திரம் மேம்படுத்தப்பட்ட ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகாரப் போட்டி, 2007 இல் மற்றொரு சுற்று பாராளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க யுஷ்செங்கோவை இட்டுச் சென்றது.

மீண்டும் ஜனாதிபதியின் கட்சி யானுகோவிச் மற்றும் திமோ ஷென்கோவின் இரு கட்சிகளுக்கும் பின்னாலேயே வந்தது. இவ்வாறு இருந்தாலும் இந்த முறை, யூலியா திமோஷென்கோ பிளாக்குடன் ஒரு கூட்டணி ஒன்று சேர்ந்து மேற்கத்தேய சார்பு ஆரஞ்சு கட்சிகளை திமோஷென்கோ பிரதமராக கொண்டு அரசாங்கத்தை அமைக்க அனுமதித்தது.

ரஷ்யாவுடன் நேர்மறையான உறவுகளைப் பேணுதல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை பெறுதல் ஆகிய அடிக்கடி முரண்பட்ட இலக்குகளை அரசாங்கம் தொடர்ந்து சமப்படுத்தியதால், யுஷ்செங்கோ மற்றும் திமோஷென்கோ இடையேயான கருத்து வேறுபாடு செப்டம்பர் 2008 இல் அவர்களின் கூட்டணியின் சரிவுக்கு வழிவகுத்தது.

ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தார். பாராளுமன்றத் தேர்தல்கள் முதலில் டிசம்பரில் திட்டமிடப்பட்டது. பின்னர் ரத்து செய்யப்பட்டது. மேலும் யுஷ்செங்கோ மற்றும் திமோஷென்கோவின் கட்சிகள் வோலோடிமிர் லிட்வின் தலைமையிலான சிறிய லிட்வின் பிளாக் உடன் இணைந்து ஒரு புதிய கூட்டணியை உருவாக்க ஒப்புக்கொண்டன.

(தொடரும்)

# வடக்கு ஆபிரிக்காவில் பாரிய காட்டுத் தீ



(அல்ஜீரியா)

வடஆபிரிக்காவின் பல மாகாணங்களில் காட்டுத் தீ அதிவேகமாக பரவி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வடஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் வேகம் கொண்டு வரும் காட்டுத் தீயினால் இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அல்ஜீரியாவில் 14 மாகாணங்களில் காட்டுத் தீ பரவி வருவதாகவும் சுமார் 39 தீயணைப்புக்குழுக்கள் கடுமையாக போராடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இப்பகுதிகளில் 45 செல்சியஸ் என்ற அளவில் வெப்பநிலை உச்சம் கொண்டு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# ஆப்கானிஸ்தான் மசூதியில் பாரிய குண்டுவெடிப்பு!

## 30 இற்கும் மேற்பட்டோர் பலி

(காபூல்)

**ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பிரபல மசூதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 30 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் மற்றும் மேலும் 40 பேர் காயமடைந்தனர்.**

காபூலின் கைர்கானா பகுதியில் அமைந்துள்ள ஒரு மசூதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை தொழுகை நடந்து கொண்டிருந்தபோது பயங்கர சத்தத்துடன் இந்த குண்டு வெடித்துள்ளது.

தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில், இந்த குண்டுவெடிப்பு சம்பவம் நடந்துள்ளது.

இந்த குண்டுவெடிப்பின் போது படுகாயமடைந்தவர்கள் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமீபகாலமாக ஆப்கரனிஸ்தானில் நடக்கும் தாக்குதல்களுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்று வரும் நிலையில் இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (4)

# மீண்டும் உயிர் பெறவுள்ள 'டாஸ் மேனியன் புலி'

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவின் "டாஸ் மேனியன் புலி" உலகில் அழிந்துபோன விலங்கினங்களில் ஒன்றாகும். இவை தைலசின் என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்த புலிகள் 1930 வரையில் பூமியில் வாழ்ந்தன. அதன் பின்னர் வேட்டையாடுதல், ஒருவகையான நோய் காரணமாக இந்த வகை புலி இனங்கள் அழிந்தன.

அவுஸ்திரேலியாவின் டாஸ் மேனியா மாகாணத்தில் உள்ள உயிரியியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வந்த உலகின் கடைசி டாஸ்மேனியன் புலி 1936 ஆம் ஆண்டில் இறந்தது. இந்த நிலையில் ஸ்டெம் செல், ஜீன் எடிட்டிங் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அழிந்துபோன டாஸ்மேனியன் புலி இனத்தை மீண்டும் பூமிக்கு கொண்டு வரும் முயற்சியில் அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

இன்னும் 10 ஆண்டுகளில் டாஸ்மேனியன் புலியை [illegible] விஞ்ஞானிகள் [illegible]றனர். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவராக விமல் வீரவன்ச

(கொழும்பு)

சுயாதீன கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச தலைமையிலான இந்த புதிய கூட்டணி குறித்த மேலதிக விபரங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்தக் கூட்டணியில் 8 சுயாதீன கட்சிகள் ஒன்றிணையும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (4)

# தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் பிரதிநிதிகளுக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தேர்தல் சட்ட சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்ற விசேட குழு முன்மொழிந்துள்ள தேர்தல் முறை திருத்தங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

முன்னதாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு இது தொடர்பில் விசேட கலந்துரையாடலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றங்கள் எதுவுமில்லை

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

கொள்கை வட்டி வீதங்களை மாற்றங்களின்றி தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய நிலையான வைப்பு வீதம் மற்றும் கடன் வசதிக்கான வீதம் என்பவற்றை முறையே 14.50%, 15.50% ஆகவும் தொடர்ந்தும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4)

# அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேறவுள்ள கோட்டா?

(கொழும்பு)

பொதுமக்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக இலங்கையிலிருந்து தப்பிச் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மீண்டும் அமெரிக்கா செல்வதற்காக கிரீன்கார்ட்டிற்கு காத்திருக்கின்றார். அங்கு தனது குடும்பத்துடன் வசிப்பதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதியின் மனைவி அமெரிக்க பிரஜை என்பதால் முன்னாள் ஜனாதிபதி கிறீன்கார்ட்டிற்கு தகுதியானவர். அமெரிக்காவில் உள்ள கோட்டாபயவின் சட்டத்தரணிகள் கடந்த மாதமே இதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டனர் என விடயங்களை அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (4)


## பெயர் மாற்றம்

தும்பளை, பருத்தித்துறையை முகவரியாகக் கொண்ட க.சிவகுமாரன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து க.ஒலிவியர் சிவகுமாரன் என பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கை சனநாயகக் குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
க. ஒலிவியர் சிவகுமாரன்.

(12476)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:மூலம் 4
கி.பா: 52 சூரி 4 செவ் 1 இல்
உயரம்:170 cm
தகைமை/தொழில்: பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு:உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12890

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: 14 சூரி 11 செவ் 10 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:Q.S (லண்டன்)
இந்தியா தான் வரலாம்
எதிர்பார்ப்பு: ஆங்கில அறிவுள்ள பெண்
தொ.இ: B/12891

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா:சூரி 1 செவ் 12 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12896

பிறப்பு: 1984 இந்து.
நட்சத்திரம் : கேட்டை 3
கி.பா: சூரி 12 செவ் 4 இல் உயரம்:5'7"
தகைமை/தொழில்:A/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு : விவாகரத்து பெற்றவர்
விவாகரத்து ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: B/12898

#### இவர்களுக்கு மணமகன் தேவை


பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 4
கிபா:48 ¾ சூரி, செவ் 2 இல்
உயரம்:148 cm
தகைமை/தொழில்: டிப்ளோமா ஆயுள்வேதம்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/10779

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: 34 ¼ சூரி 10 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: வெளிவாரி பட்டதாரி, ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: பொருத்தமான வரன்
தொ.இ:G/10791

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 20 ½ சூரி 11 செவ் 6 இல்
தகைமை/தொழில்:முகாமைத்துவ பட்டதாரி, வங்கி ஊழியர்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ:G/10780

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கிபா:71 சூரி . செவ் 1 இல்
உயரம் :5'4"
தகைமை/தொழில் :B.Com Project Officer
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
விவாகரத்து பெற்றவர்
தொ.இ:G/10794

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

சிவமயம்
ஓம் குமாராயநம

## நல்லூர் குபேரதிக்கு வாசல் குமார கோபுரம் தரிசித்து "ஓம் நமசிவாய ஓம் குமாராய நம" என ஓதி குவலயத்தில் உயர்ந்து ஞான நெறியில் அன்பு நெறியில் வாழ்வோம்

**நாதா! குமாரா! நம என்று அரனார்**
**ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்?**
**வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்**
**பாதா! குறமின் பத சேகரனே.** (கந்தர் அநுபூதி .அருணகிரிநாதர்)
கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தரது பூதி சொன்ன
எந்தயருள் நாடியிருக்கும் நாள் எந்நாளோ தாயுமானப் பெருந்தகை.

சிவபெருமான் முருகனிடம் உபதேசம் கேட்கத் தொடங்குமுன் கூறிய மந்திரம் **"குமாராய நம"** குமரா! வேதமந்திரம் குமாரசடாச்சரத்திலே சிறந்தது. முருகனுடைய ஆகமம் குமாரதந்திரம் எனப்படும். வடமொழியில் உயிர் நாடியாக இருப்பது குமரா. 'கு' என்பது உலக மாயை. 'மரா' என்பது போக்கடிப்பது. 'குமரா' என்பது உலக மாயையை போக்கடிப்பது. முதல் எழுத்து 'கு' இரண்டாவது 'மா' மூன்றாவது 'ரா' நான்காவது 'ய' ஐந்தாவது 'ந' ஆறாவது 'ம' இந்த ஆறு எழுத்தாகிய சடாச்சரம் நம்மை பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேற்றும். இதுதான் பரமசிவன் முருகனிடம் உபதேசம் கேட்டபோது திருவாய் மலர்ந்தருளிய மந்திரம்.

**குமரா சிவன் சேய் குறக்கன்னி நாதா**
**குகாகந்த சேனாப தீசக்தி பாணீ**
**எமரா வப்பரபோ தார காரீமயூரா**
**இனா நீவு வாய் குமார கோபுர நல்லூர் கந்தனே அஞ்சலென்னே!**

உலகத்தைக்காக்கும் திறமை குமார கடவுளுக்கே உரித்தானதால் தேவர்களின் சேனைத்தலைவனே. வேலேந்தியவனே. மயில் வாகனனே. வள்ளிபதியே. அடியவர்களின் துயர் களைபவனே. பிரபுவே. எங்களை எப்போதும் காத்தருள வேண்டும்.

**பரகிரியுலாவு செந்திமலையினுடனே இடும்பன்**
**பழனிதனிலே யிருந்த குமரேசா! பதிகள்**
**பலவாயிரங்கள் மலைகள் வெகு கோடி**
**நின்ற பதமடியார் காண வந்த கதிர்காமா!**
**சிகரமருந்த வாழ்வது சிவஞானம்!**

சிவமய ஞானம் கேட்க தவமுனிவோரும் பார்க்க திருநடனமாடுங் கூத்தர் முருகோனே! எந்தை கந்தவேல் குமரேசா! எல்லா நலன்களையும் தரும் திருப்புகழ், அநுபூதி, சிவபுராணம், திருமுறைகளையும் இறைநாமமும் ஓத திருவருள் புரிவாய் "ஓம்நமசிவாய" "ஓம் குமாராய நம"

**அன்பே சிவம்**
க | K
க.கு.க | K.K.K
க | K
**க.கு.கந்தையாபிள்ளை அன்சன்**

(C-4754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.

– சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இலங்கையில் தோற்றுப்போன இந்தியாவின் இராஜதந்திரம்

சீனக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசித்தமை தொடர்பில் பல்வேறு கருத்துக்களும் விமர்சனங்களும் வந்த வண்ணமுள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள சீனக் கப்பல் இலங்கைக்குள் வந்ததன் நோக்கம் என்ன? என்று ஆராயும் போதுதான் அதன் உள்ளார்ந்தங்கள் வெளிப்படும்.

அதாவது சீனக் கப்பல் இலங்கைக்குள் வருவதன் மூலம் இலங்கை ஆட்சியாளர்களின் மனநிலையை அறிவது இதன் முக்கிய நோக்கமாகும்.

அதாவது இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது சீனாவின் உதவி எதிர்பார்த்தளவில் இலங்கைக்குக் கிடைக்கவில்லை.

மாறாக பொருளாதார நெருக்கடிக்கு ஆளான இலங்கை விடயத்தில் மீற்றர் வட்டிக்காரர் போலவே சீனா நடந்து கொண்டது.

அதாவது இலங்கைக்குக் கடன் தருவதாக இருந்தால், ஏலவே இருக்கக்கூடிய கடன்களை; தருகின்ற கடனில் கழித்துவிட வேண்டும் என்பது சீனாவின் முதல் நிபந்தனையாயிற்று.

சீனாவின் இந்த நிபந்தனைகள் இலங்கைக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியது எனலாம்.

இருந்தும் அண்டை நாடான இந்தியா தனது தார்மீகக் கடமையை செய்தது என்றே கூறவேண்டும்.

ஆம், பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு திணறிய இலங்கைக்கு வேண்டிய உதவியை இந்தியா வழங்கியது.

இந்தியாவின் இந்த உதவிக்குள் இராஜதந்திர நோக்கங்கள் இருந்ததாயினும் அதனையும் கடந்து வறுமையில் வாடுகின்ற இலங்கை மக்களுக்கு உண்டி கொடுப்பதென்பது உயிர் கொடுப்பதற்குச் சமமானதாகும்.

இந்த இடத்தில் இந்தியாவின் உதவி இலங்கை அரசாங்கத்தை நெகிழ வைத்தது.

உண்மை, சீனாவுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட்டபோதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் தக்கதருணத்தில் உதவுதல் என்ற மனிதாபிமான அடிப்படையில் இந்தியா நடந்து கொண்டதால் இந்தியாவுடனான உறவைப் பலப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை இலங்கையில் மீளுருவாக்கம் பெற்றது.

இது இந்தியாவின் இராஜதந்திரத்துக்கு வெற்றியாக இருந்தாலும் சீனக் கப்பல் இலங்கைக்குள் நுழைந்தபோது இந்தியாவின் இராஜதந்திரம் தோற்றுப் போனது.

அதாவது இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு இந்தியா உதவி செய்தாலும் ஏலவே சீனா வகுத்த வியூகத்தை தோற்கடிக்க முடியாது என்பதையும் எந்த நேரத்திலும் இலங்கைக்குள் நுழையக்கூடிய வல்லமையும் அதிகாரமும் சீனாவுக்கு உண்டு என்பதையும் உறுதிப்படுத்தும் வகையிலேயே சீனக் கப்பல் இலங்கைக்குள் நுழைந்தது.

இங்குதான் இந்தியாவின் இராஜதந்திரம் பலவீனப்படுகிறது.

உண்மையில் ஈழத் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை இந்தியா பெற்றுக் கொடுத்திருக்குமாயின், இப்போது இந்தியாவின் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்க முடியும்.

என்ன செய்வது ஈழத் தமிழர்களுக்கு உரிமை கொடுத்தால் அது அகண்ட பாரதத்துக்குப் பங்கம் என்று நினைத்த இந்தியா தானே தனக்கு வினை தேடிக் கொண்டது. ஆயினும் இன்னமும் காலம் கனிந்தே இருக்கிறது. இந்தியா அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# யாழ். மந்திரிமனையை மீள்நிர்மாணம் செய்வதற்கு நிதி உதவிகள் செய்க

## யாழ். மரபுரிமை மையத்தினர் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மந்திரிமனை எதிர்வரும் மழைக்காலத்தில் இடிந்து விழுந்துவிடுமோ என்கிற அச்சம் காணப்படுவதால் அதனை மீள்நிர்மாணம் செய்வதற்கு தேவையான நிதியை பெற செல்வந்தர்களும் புலம்பெயர்ந்தவர்களும் உதவமுன்வர வேண்டுமென யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் அவசர கோரிக்கையை விடுத்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே யாழ்ப்பாண மரபுரிமை மையத்தினர் இந்த அவசர கோரிக்கையை விடுத்தனர்.

இதில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் தலைவர் வரலாறறு துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், தற்போது எமக்குள்ள வசதி வாய்ப்பை மீள்நிர்மாணம் செய்யும் போது பல்வேறு தடைகள் ஏற்படுகின்றது.

மந்திரிமனையை மீள்நிர்மாணம் செய்து சுற்றுலாத்தலமாக மாற்ற தொல்லியல் திணைக்களம் எங்களுக்கு அனுசரணை தந்திருக்கின்றது.

இந்தப் பணியை செய்வதற்கு பல தடைகள் காணப்படுகின்றது. அந்தத் தடையை தாண்டி தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு அதனை செய்யவுள்ளோம்.

மரபுரிமை சின்னங்களினுடைய நில உரிமையாளர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். நில உரிமையாளர்கள் மரபுரிமை சின்னங்களை அழித்துவிட்டு வேறு பணியை செய்ய முடியாது.

மரபுரிமை சின்னங்களினுடைய நிலங்களை அன்பளிப்பாகவோ அல்லது விலைக்கோ எங்களுக்கு தந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

புனரமைக்க வேண்டிய முந்நூறுக்கும் மேற்பட்ட தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. அரச அனுமதியோடு புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து நிதியை பெறுவதற்கு முயல்வதோடு செல்வந்தர்கள் இவ்வாறான பணிகளுக்கு உதவ முன்வர வேண்டும். அரசியல் வேறுபாடின்றி அனைவரும் இதில் பங்கேற்று கைகொடுக்க வேண்டும் என்றார். (ம-7,33,104)

## யாழ். மந்திரிமனை நிலத்தை

# கொள்வனவு செய்ய ரூ. 7 கோடி செலவாகும்

## முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மந்திரிமனை நிலத்தை கொள்வனவு செய்து முற்று முழுதாக மீள்நிர்மாணம் செய்ய 7 கோடி ரூபா செலவாகும் என யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

மந்திரிமனையை மீள்நிர்மாணம் செய்ய உதவி புரியுமாறு யாழ். மரபுரிமை மையத்தினர் நேற்று கோரிக்கை விடுத்து யாழ். ஊடக மையத்தில் ஊடகவியல்ாளர் சந்திப்பை மேற்கொண்டனர்.

அங்கு கருத்து தெரிவிக்கும்போதே மணிவண்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மந்திரிமனை அமைந்துள்ள நிலத்தை கொள்வனவு செய்து முற்று முழுதாக மீள்நிர்மாணம் செய்வதாக இருந்தால் 7 கோடி இலங்கை ரூபாய் செலவாகுமென மதிப்பிட்டுள்ளோம். மந்திரிமனை இடிந்துவிழாதவாறு உடனடியாக அதனை பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்வதற்கு 5 மில்லியன் ரூபாய் தேவைப்படுமென மதிப்பிட்டுள்ளோம்.

செல்வந்தர்கள் மரபுரிமைச் சின்னங்கள் மீது அக்கறை கொண்டவர்கள் இந்தப் பணியில் கைகோர்க்க வேண்டும்.

செல்வந்தர்களிடமும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் உறவுகளிடமும் அமைப்புகளிடமும் நாங்கள் மன்றாட்டமாக கேட்பது இந்த வேலை திட்டங்களை விரைவாக ஆரம்பிக்க உள்ளோம். உங்களால் இயன்ற நிதி உதவிகளை விரைவாக எமக்கு தந்தால் அவற்றை செய்து கொள்ள முடியும் என்றார்.

இச் சந்திப்பில் யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் தலைவர் வரலாற்று துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், மையத்தின் பதிப்பாசிரியர் வ.பார்த்திபன், மையத்தின் உறுப்பினரும் யாழ். மாநகர முதல்வருமான வி.மணிவண்ணன் ஆகியோர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வர்லாற்று சின்னங்களை பாதுகாத்து அதை மீள்நிர்மாணம் செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம் மரபுரிமை மையம் என்கிற அமைப்பு கடந்த வருடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

# அடக்குமுறைகளை ரணில் அரசு உடன் கைவிட வேண்டும்

## ஹிருணிகா பிரேமச்சந்திர

(கொழும்பு)

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்ல வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக ஐக்கிய மகளிர் கூட்டணியின் அங்கத்தவர்கள் அரசால் இலக்கு வைக்கப்படுகின்றனர். விரைவில் என்னையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கக்கூடும். எனினும் அவற்றுக்கு நாம் அஞ்சப் போவதில்லை.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடந்த மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 9 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார் என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

எனவே, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அவர் தலைமையிலான அரசு உடன் கைவிட வேண்டும். காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாத பெண்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

ஐக்கிய மகளிர் கூட்டணியின் செயலாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் சுமார் 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பாசிஸவாதிகளாகக் காண்பிப்பதற்கே அரசு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

1988, 1989 களில் இடம்பெற்ற வன்முறைகளைப் போன்று இந்த ஆர்ப்பாட்டங்களையும் காண்பிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது என்றார். (ம-7)

# திறந்த பல்கலைக்கழக கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் புதிய [illegible] இன்று [illegible] வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி [illegible] பிரேம[illegible] கலந்துகொள்ளவுள்ளார். (ம-7)

# யாழ். இந்துக் கல்லூரியில் ஹிந்தி வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஹிந்தி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக் கலாமன்றத்தின் நாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவியும் நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியுமான செல்வி எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலாவின் பரதநாட்டிய நாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையை பயின்று அரங்கேற்றத்தை மேற்கொள்கின்ற ஆறாவது மாணவியாவார்.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லண்டன், சலங்கை நர்த்தனாலயா நுண்கலைக் கல்லூரியின் இயக்குநர் கலாநிதி ஜெயந்தி யோகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை நடனத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன், யாழ் கல்வி வலய நடனபாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துஷ்யந்தி துஷிதரன், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை பிரதி அதிபர் திருமதி அக்னஸ் செல்வராணி சத்தியசீலன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அணிசெய் கலைஞர்களாக ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் நட்டுவாங்கம், நடன அமைப்பினையும், யாழ்.பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தின் இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் இசைமாணி தவநாதன் றொபேட் குரலிசையையும், மிருதங்க ஞான வாரிதி சி.துரைராஜா மிருதங்க இசையையும், சுருதி வேந்தன் அ.ஜெயராமன் வயலின் இசையையும் வழங்கி அரங்கேற்றத்திற்கு அணிசெய்யவுள்ளனர். (4)

# மின்கம்பியில் சிக்கி யானை உயிரிழப்பு

(நெளுக்குளம்)



வவுனியா கணேசபுரம் பகுதியில் நேற்று முன்தினம் காலை சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி காட்டு யானை உயிரிழந்துள்ளதாக வவுனியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தோட்டத்தைச் சுற்றி போடப்பட்டிருந்த சட்டவிரோத மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை உயிரிழந்துள்ளதாகவும் சுமார் எட்டு அடி உயரமுள்ள 25 வயதுடைய யானை ஒன்று மின்கம்பியில் மோதி உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (4-299)

## செல்வசந்நிதி ஆலய

# மஹோற்சவ கால நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் 27 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனை முன்னிட்டு மஹோற்சவ ஏற்பாட்டு கூட்டத்தில், பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டது.

அவையாவன,

மஹோற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ஒருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதனை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்திற்கு செல்ல முடியும்.

இவ்வருடம் நீர்பாசனத் திணைக்கள பாலத்துடனான நடைபாதை போக்குவரத்து இறுதி ஐந்து நாட்களும் இடம் பெறும்.

ஆலய பூசைகளின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்துப் பாதைகள் பிரயாணிகள் மாற்றுவழி தடைப்படுத்தப்படும்போது பாதையினை பாவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கு மற்றும் தற்காலிக கடைகளுக்கும் அனுமதிமறுக்கப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் காணிகள் கடைகள் ஆலய வீதியில் பக்தி தொடர்பான வியாபாரங்களுக்கே அனுமதிக்கப்படும் என்பதுடன் புதிய கடைகள் மற்றும் வீதியோர கடைகள் வீதியில் அமைக்கப்படுவதற்கு தடைசெய்யப்படும்.

உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

உணவு நிலையங்களிற்கான குடிநீர் பொது சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

பக்தர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடை முறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற் கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயளாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக்கொண்டார். (4-33)

## திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவருமான செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கேதீச்சரம் ஆலயம் வரலாறு தொடர்பான விடயங்களைத் தொகுத்து வெளியிடப்படும் திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர். கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்றத்தின் யாழ்.மாவட்ட் பிராந்திய நிலையத்தில் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தின் முதல்வர் ஆன்மிகச்சுடர். ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் இடம் பெற உள்ளது. (4-18)

## கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் புதிய கட்டத்திறப்பு விழா இன்று வெள்ளிக் கிழமை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்வியமைச்சர் கலாநிதி. சுசில் பிரேம ஜெயந்த மற்றும் பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக்குழுவின்,தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

# 1,429 லீற்றர் பெற்றோலுடன் இருவர் மடக்கி பிடிப்பு

(கொழும்பு)

புத்தளம் சிலாபத்திலிருந்து கற்பிட்டி பகுதிக்கு அனுமதிப் பத்திரமில்லாமல் சட்டவிரோதமாக பெற்றோலை லொறியொன்றில் கொண்டு செல்ல முற்பட்ட இருவர் தம்பபண்ணி உடப்பு கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 1,429 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர்களென கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் பெற்றோல் மற்றும் கடத்துவதற்கு பயன்படுத்திய லொறி ஆகியவை மேலதிக நடவடிக்கைகளுக்காக நுரைச்சோலைப் பொலிஸ் நிலையைத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை நுரைச்சோலைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவித்தனர். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 470 | 500 |
| தக்காளி | 400 | 300 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 240 |
| கோவா | 340 | 450 | 450 | 450 |
| கரட் | 300 | 360 | 380 | 400 |
| பூசணி | 160 | 100 | 120 | 120 |
| புடோல் | 100 | 120 | 120 | 180 |
| வாழைக்காய் | 150 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 180 | 180 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 220 |
| பயற்றங்காய் | 100 | 180 | 120 | 120 |
| லீக்ஸ் | 300 | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 100 | 400 | 400 |
| போஞ்சி | 550 | 650 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 380 | 300 | — | 340 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 80 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 150 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 140 | 250 |
| பொன்னாங்கண்ணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 70 | 80 | 150 |

# போராட்டக்காரர்களிடம் நட்டஈடு அறவிட அரசு தீர்மானம்

(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டத்தினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான நட்டஈட்டை, போராட்டக்காரர்களிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு உரிமை காணப்படுகின்றது என கூறிய தரப்பிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களிடமிருந்து முழுமையான நட்டஈட்டை அறவிட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## +5 மரணம்...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 668, 663ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றால் மேலும் 5 பேர் மரணித்துள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட நால்வரும் 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட ஒருவரும் கோவிட் - 19 தொற்றினால் உயிரிழந்ததாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## கலசாபிஷேகம்...

கலசாபிஷேகம் இன்று 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை, கார்த்திகை உற்சவ தினத்தன்று காலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-7,18,33)

## அத்தியாவசிய...

விலை மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சந்தையில் ஏனைய பொருட்களுக்கான விலைகளை வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் அடிக்கடி அதிகரிப்பதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பொதி செய்யப்பட்ட உற்பத்தி சார்ந்த பொருட்களின் விலைகள் அண்மைய காலமாக பல தடவைகள் அதிகரிக்கப்பட்டன. அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படாமையே இதற்கான காரணம் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிஸ்கட், சவர்க்காரம், சலவைத் தூள், உடனடி நூடில்ஸ், சோயா உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் தற்போது வெகுவாக அதிகரித்துள்ளன.

அதிக விலை காரணமாக சில பொருட்களை நுகர்வோர் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதன் காரணமாக அத்தியாவசிய பொருள் உள்ளிட்ட ஏனைய உற்பத்தி பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என நுகர்வோர் அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## திருக்கேதீச்சரம்...

இடம்பெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன சுவாமிகளும் வாழ்த்துரையை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோரும் வெளியீட்டுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் நயப்புரையை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பெற்றுக் கொள்ள நூலாசிரியர் உரையை கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் வழங்குவார். (ம)

## ஐக்கிய நாடுகள்...

பசுபிக் பிராந்தியத்திற்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்கான பெங்கொக் அலுவலகத்தின் பணிப்பாளர் டேவிட் மஸ்னெக்யன் கார், ஐக்கிய நாடுகளின் நிரந்தர பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தின் பிரதானி ஆண்ட்ரியாஸ் கர்பாதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஜனாதிபதியின் இளைஞர் மற்றும் நிலையான அபிவிருத்தி விவகாரப் பணிப்பாளர் ரந்துல அபேதீர ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-7)

## பிரச்சினைகளை...

நேற்று மாலை யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது யாழ்.மாவட்டத்தில் அதிபர்கள் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் எதிர்வரும் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் ஆளுமை பற்றாக்குறை என்பவற்றை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் தூரப் பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைக்கு செல்லும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு உடனடியான தீர்வினை மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமாகாண கல்வி அமைச்சு, வடமாகாண கல்வி பணிப்பாளர்களின் அசமந்தப்போக்கு, இடமாற்ற கொள்கையினை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிப்பு செய்தல், தற்பொழுது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்சினை, போன்றவை தொடர்பில் இதன்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அத்துடன் கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கும் அமைச்சர் இதன்போது நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன், கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கருத்துக்களை முன்வைத்தனர். (ம-7,33)

## பல்...

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்று கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்திலிருந்து ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்கள் நகர மண்டபம் ஊடாக கொம்பெனிதெருவை அடைந்ததையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

## செப்ரெம்பர்...

படியான உயர்வு இருக்கும் என்றும், எனினும் முன்னர் அறிவித்தது போல் பணவீக்கம் 70% அளவை எட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்

மேலும் இலங்கை மத்திய வங்கி 2022ஆம் ஆண்டிற்கான அதன் நாணயக் கொள்கை மீளாய்வு இலக்கம் 6 இல், பணவீக்கத்தின் வேகம் எதிர்பார்த்ததைவிட வேகமாக மிதமானதாக இருக்கும் எனக் கூறியுள்ளது எனவும் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். (ம-7)

## இராஜதந்திர...

படுவதாக வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ நாடு திரும்புவதில் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எந்த ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவர் இராஜதந்திர மார்க்கமாக நாடு திரும்புவார் எனவும் அமைச்சர் கூறினார்.

அவர் இலங்கையின் குடிமகன், அவர் விரும்பியவாறு பயணம் செய்யலாம் என்றும் அலி சப்ரி கூறினார். (ம-7)

### தன நிதானய

திகதி - 2022.08.18
சீட்டிழுப்பு இலக்கம் - 881
ஆங்கில எழுத்து: V — வெற்றி இலக்கங்கள்: 31 32 34 43

### மஹஜன சம்பத

திகதி 2022/08/18
சீட்டிழுப்பு இலக்கம் 4851
ஆங்கில எழுத்து: Q — வெற்றி இலக்கங்கள்: 1 7 4 2 8 8
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.18
சீட்டிழுப்பு இலக்கம் 160
மிதுனம் — வெற்றி இலக்கங்கள்: 07 21 33 62 — மிதுனம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 18/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1199
வெற்றி எழுத்து: N — சுப்பர் இலக்கம்: 19 — வெற்றி இலக்கங்கள்: 24 39 43 73

### கொவிசெத

திகதி 2022.08.18
சீட்டிழுப்பு இலக்கம் 3093
ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 04 29 66 73
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 18/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1310
வெற்றி இலக்கங்கள்: மகரம் 1 4 9 8 3 1
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1826 — நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.08.18 — தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: S 45 58 61 74
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,265,280/-

### சனிதா

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.18
சீட்டிழுப்பு இல : 3987
வர்ணம் : சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,884,720/-
வெற்றி இலக்கங்கள்: 21 23 33 39 — ஆங்கில எழுத்து: R

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-08-18
வெற்றி வாரம் 3538
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள்: 08 25 30 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,071,960/-

### வாராந்த 25

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: V 18 10 21 38 42
சீட்டிழுப்பு வாரம் 1002
2022.08.18 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 254,463,169/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

### சம்பத்தன வாசனா

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 519 — திகதி 2022-08-18 — வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து: D — வெற்றி இலக்கங்கள்: 20 32 41 — விதி எண்: 03
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,921,348/-
Web: www.dlb.lk

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1652
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.18
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,990,500/-
வெற்றி இலக்கங்கள்: 04 15 24 27 — ஆங்கில எழுத்து: A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சைக்காக
# விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நீடிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 26ஆம் திகதி வரை உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

# அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் நாட்டைகட்டியெழுப்ப ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் பாராளுமன்ற குழுக்களில் இருந்து கொண்டு நாட்டை கட்டியெழுப்ப ஆதரவு வழங்க காத்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம் பெறுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியாக இந்நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு தேவையான உதவிகளை வழங்க தீர்மானித்தோம்.

பாராளுமன்றத்தை பலப்படுத்தி அதனூடாக செயற்படுவேன் என ஜனாதிபதி கொள்கை பிரகடன உரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதனை வன்மையாக கண்டிக்கிறோம். எவ்வாறாயினும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எமது கட்சி ஆதரவை வழங்குமே தவிர கட்சியிலிருந்து எவரும் செல்லமாட்டார்கள் என்றார். (ம-7)


## IELTS வகுப்புகள்

புதிய பிரிவுகள் 23.08.2022 அன்று ஆரம்பம்

- 10 வருட கால IELTS அனுபவமுள்ள ஆசிரியர்.
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே.
- தனிப்பட்ட கவனிப்புகள்.
- 6 புள்ளிகளுக்கு மேல் எடுப்பதற்கான உத்தரவாதம்.
- தனிப்பட்ட நேரத் தெரிவுகள்.
- மிகக் குறைந்த கட்டணங்கள்.

22.08.2022 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

(12456)

WINSTAR CONSULTANTS (PVT) LTD
NO.45, VEMPADY STREET, JAFFNA.
077 395 0857

## Europe Visa

Azerbaijan நாட்டில் 8 மாதகால கல்வியினை மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ள இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

ஆகக் குறைந்த தகைமை - O/L

7 நாட்களில் வீசா பெற்று பயணமாகலாம். (12454)

077 395 0857

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான 12 இல் செவ்வாய் உள்ள உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. (12480)

077 116 9757

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

(12482)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-4749)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவீஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

(C-4749)

எமது கிளைகள்
கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

XAL

# இலவச அழைப்பு

இன்று வெள்ளிக்கிழமை (19.08.2022) மாலை 6.00 மணிக்கு நடைபெறும் கூட்டத்திற்கு உங்களை வரவேற்கின்றோம்.

இடம் : நல்லூர் மயிலூரன் அரங்கம்
இல. 590, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். தொடர்பு : +94 77 792 2265

OBJECT AUTOMATION

- அபாகஸ் கணித முறை வகுப்பு.
- பழங்கால வேத முறை கணித சூத்திரங்கள் பயிற்றுவித்தல் வகுப்பு
- ஆர்டிபிஷியல் இன்டலிஜென்ஸ் (AI) கணினி வகுப்புகளைப் பற்றிய விரிவான விளக்கக் கூட்டம்

அனைவரும் வருக!




( வருகை தரும் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்படும். )

(12483) (C-4758)







நல்லூர் மயிலூரன் அரங்கம்
NALLUR, MYLOORAN ARANGAM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.